பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 24 (9—12—68) திங்கள் ★ வெளியூர் : கார்த்திகை 23 (10—12—68) செவ்வாய் [இதழ் : 145

கரும்பு விலை நிர்ணயம்

தலைமையமைச்சர் தகவல்

"கரும்புக்கான விலை நிர்ணயம் பற்றி மத்திய அரசு முடிவு எடுக்கும்.

"கரும்புச் சாகுபடியாளர்களின் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு நாங்கள் பெரிதும் விரும்புகிறோம்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, பொதுக்கூட்டமொன்றில் கூறியிருக்கிறார்.

மராட்டியத் தலைநகரில் முத்தமிழ் முழக்கம்

தமிழக அமைச்சர்களுக்குச் சிறப்பான வரவேற்பு

பாரதி கலை மன்றத்தார் நடத்திய இரண்டு நாள் விழா

பம்பாய், டிச. 8—

பம்பாய்க்கு வருகை தந்துள்ள தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி ஆகியோருக்கு பாரதி கலை மன்றம் மாதுங்காவில், சிறப்புமிக்க வரவேற்பு அளித்தது.

மாதுங்காவில், பாரதி கலை மன்றம் இரு நாட்களாகப் பாரதி விழா நடத்தியது; இரண்டாம் நாள் விழாவில் அமைச்சர்களுக்கும் மற்றும் தோழர்கள் சா. கணேசன், எஸ். டி. சுந்தரம், கே. ஆனந்தம், அப்துல் ரகிமான் ஆகியோருக்கும் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப் பட்டது.

மன்றத் தலைவர் எஸ். சங்கரன், அனைவரையும் வரவேற்றார்.

பம்பாய் மேயர் டாக்டர் ஆர். என். குல்கர்னி, விழாவிற்குத் தலைமைதாங்கினார்.

பாரதிதாசன் பற்றிய 'கவியரங்கு' நடைபெற்றது; தோழர்கள் சா. கணேசன், அமைச்சர் மா. முத்துசாமி எஸ். டி. சுந்தரம், அப்துல் ரகிமான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாலையில் திரு. சா. கணேசனின் மணி விழா நடைபெற்றது.

பல்வேறு துறைகளில் திரு. கணேசன் ஆற்றியுள்ள பணிகளை அமைச்சர் கருணாநிதி பாராட்டினார்; அவரது எளிமையையும் அடக்கத்தையும் அமைச்சர் வெகுவாகப் புகழ்ந்தார்; நாட்டு ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்; 'பம்பாயிலுள்ள தமிழர்கள் அங்குள்ள மக்களுடன் இரண்டறக் கலந்து ஒன்றிப் போகவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

மன்றம் நடத்திய பல்வேறு பாரதி கலைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் கருணாநிதி பரிசுகள் வழங்கினார்.

பாரதி கலைமன்றமும், பம்பாய் மக்களும் தம்மிடம் காட்டிய அன்புக்காக சா. கணேசன் நன்றி தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் வாணி -- மீரா சகோதரிகள் பரத நாட்டியம் குறிப்பிடத் தக்கது.

முதல் நாள் விழாவில்

மகாராட்டிர இலக்கியக் கலாச்சாரக் கழகத் தலைவர் இலட்சுமண சாஸ்திரி ஜோஷி, விழாவைத் துவக்கிவைத்தார்.

அமைச்சர் மு. கருணாநிதி பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நம்பிக்கைகளையும், அச்சங்களையும் களைந்து பாரதி கண்ட புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்க வேண்டும்.

"பாரதியின் பெருமையைப் பற்றிப் பேசுவோரின் கடமை, அவர் கண்ட கனவுகளை நனவாக்குவதேயாகும்.

"தமிழர்களுக்கும் -- மராட்டியர்களுக்கும் இடையே கலை, பண்பாட்டுத் துறையில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது; ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று மகத்தான பணிகளை ஆற்றியிருப்பதற்கு வரலாற்றில் சான்றுகள் உள்ளன."

தென்னகத்தின் தனிச் சிறப்பியல்புகள்

பிரிட்டிஷ் அமைச்சரிடம் அறிஞர் அண்ணா விளக்கம்

சென்னை, டிச. 9--

"தமிழக முதலமைச்சருடன் இனிமையான -- சுவைமிக்க பேச்சுவார்த்தை நடத்தினேன்.

"தென்னகத்தின் தனிச் சிறப்பியல்புகள் பற்றி முதலமைச்சர் என்னிடம் கூறினார்; மொழி, தொழில்துறை முன்னேற்றம், குறிப்பாகத் தென்னகத்தில் தொழில் வளர்ச்சி, உணவு, வேளாண்மை ஆகியவை பற்றி மனம்விட்டு விவாதித்தோம்"

என்று, சென்னைக்கு வருகைதந்த பிரிட்டிஷ் வெளி உறவுத்துறை அமைச்சர் மைக்கேல் ஸ்டுவர்ட், முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்து உரையாடிய பின், தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் கூறினார்.

பேச்சுவார்த்தையின்போது உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்ட அமைச்சர் செ. மாதவன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன், பேராசிரியர் க. அன்பழகன், முரசொலி மாறன் ஆகியோரும் உடனிருந்தனர்.

மோட்டார் அனுமதியளிப்பு-- வரி வசூல் பொறுப்பு

மத்திய அரசே எடுத்துக்கொள்ள யோசனையாம்

வருவாய் குறையுமென மாநில அரசுகள் கருத்து

சென்னை, டிச. 9—

மாநிலங்களிடையே ஓடும் மோட்டார் பெர்மிட்டுகளை வழங்கும் பொறுப்பையும், வரிகளை விதிக்கும் பொறுப்பையும் மத்திய அரசு ஏற்கும் வாய்ப்புப்பற்றி மாநிலங்களுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக நாட்டை நான்கு மண்டலங்களாகப் பிரிக்கலாம் என்றும், ஒவ்வொரு மண்டலத்துக்கும் நியமிக்கப்படவிருக்கும் மத்திய போக்குவரத்து அதிகாரிகளிடம் மண்டலப் பெர்மிட்டுகளை வழங்கும் பொறுப்பை ஒபபடைக்கலாம் என்றும் மத்திய அரசு யோசனை கூறுகிறது.

இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும் வரி வருமானத்தில் ஒரு பங்கைப் பல்வேறு மாநிலங்களுக்கு அரசு அளிக்கும்.

தற்போது மத்திய எக்சைஸ் தீர்வை மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பங்கு மாநிலங்களுக்கு அளிககப்பட்டு வருவது நினைவு கூரத்தக்கது.

ஆனால் இதற்குத் தனிச் சட்டம் இயற்ற வேண்டும்; அரசியல் சட்டத்தையும் திருத்த வேண்டும்.

மாநில அரசுகள் இத்திட்டத்தை ஆதரிப்பதாகத் தோன்றவில்லை; ஏனெனில், மாநிலங்களின் வருமானத்தை இது குறைக்கும்; ஆனால் பெர்மிட்டுகளை வழங்கும் பொறுப்பை மத்திய அரசு ஏற்பதற்கு மாநிலங்கள் ஒப்பலாம்.

வரிகளை விதிக்க வாய்ப்பு இல்லாமல், பெர்மிட்டுகளை வழங்குவதை மட்டும் மேற்கொள்வதை மத்திய அரசு விரும்பும் என்று தோன்றவில்லை.

மக்கள் தந்த பணம் மக்கள் நலனுக்கு!

தமிழக அரசின் சீரிய நோக்கம்

சென்னை, டிச. 9—

பரிசுச் சீட்டுக்களின் மூலம் கிடைக்கும் பணத்தை சில குறிப்பிட்ட நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தும் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கலாம். திட்ட விவரங்களை நிதித்துறை தயாரித்து வருகிறது.

பரிசுச் சீட்டுத் திட்டத்துக்குப் பொதுமக்கள் ஆதரவு பெரும் அளவில் இருக்கிறது; இதற்கு இசைவாக, 'பரிசுச் சீட்டு மூலம் கிடைக்கும் பணம் மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படும் என்ற உறுதியை அளிக்க வேண்டும்' என அரசு கருதுவதாகத் தோன்றுகிறது.

மாணவர்களுக்குத் தாராளமாக உதவிச் சம்பளம் அளிக்க இதனைப் பயன்படுத்தலாமா அல்லது அதிக எண்ணிக்கையில் மருத்துவமனைகளையும், பள்ளிகளையும் துவக்கப் பயன்படுத்தலாமா என்பது தற்போது பரிசீலனையில் உள்ளது.

அரியானாவில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

பன்சிலால் அமைச்சரவையின் வீழ்ச்சி உறுதி

மாற்றுக் கட்சி ஆட்சி அமைய முட்டுக்கட்டை

அரியானா மாநிலத்தில் காங்கிரசு ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டால் உடனடியாக மாற்றுக் கட்சிக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பளிக்காமல் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்திவிட டெல்லி கருதிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அரியானா சட்டமன்றத்தில் திரு. பகவத் தயாள் சர்மா தலைமையில் உள்ள காங்கிரசு உறுப்பினர்கள் 19 பேர் 'காங்கிரசுக் கட்சிக்கு முழுக்குப் போட்டுவிடுவது' என்று நேற்றிரவு இறுதியாக முடிவு செய்துவிட்டனர். இதன் விளைவாக, பன்சிலால் அமைச்சரவைக்கு ஆபத்து நேர்ந்துள்ளது.

பன்சிலால் அமைச்சரவைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன.

இந்த நேரத்தில், பகவத் தயாள் தலைமையில் உள்ள 19 காங்கிரசு உறுப்பினர்களும் எதிர்க் கட்சியினருடன் சேர்ந்து வாக்களித்தால், காங்கிரசு அமைச்சரவைகவிழ்ந்துவிடும்.

பகவத் தயாள் சர்மா கோஷ்டியின் முடிவு பற்றிய தகவல் அறிந்து டெல்லியில் உள்ள காங்கிரசு மேலிடம் அதிர்ச்சியடைந்ததுடன், அவசர அவசரமாகக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, காங்கிரசு நாடாளுமன்றக் குழுவைக் கூட்டியும் மற்றும் முக்கியத் தலைவர்களுடனும் ஆலோசனை செய்துவருகிறார்.

பகவத் தயாள் சர்மா குழுவினரும், ஏனைய எதிர்க் கட்சியினரும் சேர்ந்து மாநில கவர்னரையும் குடியரசுத் தலைவரையும் சந்தித்து பன்சிலால் அமைச்சரவையை நீக்கவும், புதிய அமைச்சரவை அமைக்குமாறு எதிர்க் கட்சியினரை அழைக்கும்படியும் கோருவார்கள் என்று தெரிகிறது.

இதற்கிடையில், அரியானாவில் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தலாமா என்று டெல்லி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

திட்டங்களைச் செயலாக்கும் பொறுப்பு

பரவலாக்க வி. வி. கிரி கூறும் யோசனை

ஐதராபாத், டிச. 9—

"ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதை, மாநிலங்களிடம் ஒப்படைக்க வேண்டும்; அப்பகுதி மக்களின் ஒத்துழைப்பைப்பெறுவதற்கு இது பெரிதும் உதவும்.

"இன்னொரு படி அதிகம் சென்று திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை மாவட்ட--ஊராட்சி அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிடலாம்; இந்தப் போக்கு, நமது திட்டங்கள் அதிக முன்னேற்றம் காணவும், மக்கள் ஆதரவைப் பெறவும் பெரிதும் உதவும்"

என்று துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்.

சமுதாயத்தைப் பிரதிபலிப்பவர் போலீசார்!

முரண்பாடு நிலவும் இடங்களில் சகிப்புடன் செயலாற்றுகின்றனர்

தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகட்குத் தீர்வு காணும் நிலையில் உள்ளனர்

போலீசார் விளையாட்டுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் முதலமைச்சர் அண்ணா ஆய்வுரை

சென்னை, டிச. 9—

"எந்தச் சமுதாயத்திலிருந்து போலீசுப் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக்கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள்; அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகியிருப்பதில்லை!

"போலீசுப் படை நன்றாக -- நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும்; அதேபோல், போலீசுப் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறிழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன!

"தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்; முரண்பாடு ஏற்படுகிற இடங்களிலெல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டியிருக்கிறது; எல்லாவிதத்திலும் சகிப்புத்தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியுள்ளது; உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் -- பற்றற்ற அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்; பெற்ற சிறந்த பயிற்சிக்கொப்ப கடமையுணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், மாநிலப் போலீசுத் துறை விளையாட்டுப் பந்தயப் போட்டிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டுப் போலீசுப் படையினைக் குறித்து இம்மாநிலத்துக்கு வெளியே தான் சென்ற இடங்களில் வெகு உயர்வாகக் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்; குறிப்பாக, குற்றங்களுக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடிப்பதில் தமிழ்நாட்டுப் போலீசாருக்குள்ள ஆற்றலை அவர்கள் மெச்சியுரைத்திடக் கேட்டிருக்கிறேன்.

அண்மைக் காலத்தில் சென்னை மாநகரில் தொடர்ச்சியாக முகமூடிக் கொள்ளைகள் நடந்தபோது இம்மாநிலத்துக்கு வெளியே பலர், 'இவற்றை எப்படிச் சமாளிப்பார்கள் -- உங்கள் போலீசுப் படையினர்; என்று என்னிடம் தங்கள் ஐயப்பாட்டைத் தெரிவித்தனர். அத்தகைய நேரத்தில், அந்தக் கொள்ளைகளின் பின்னாலிருந்த மர்மத்தைக் கண்டுபிடித்ததோடு இந்தியா முழுவதும் சுற்றி அலைந்து 'அந்தக் கொள்ளைக் கோஷ்டியின் தலைமையகம் எது? கிளைகள் எங்கெங்கே இருக்கின்றன? மூலகாரணங்கள் என்னென்ன?' என்பதையெல்லாம் தமிழ்நாட்டுப் போலீசார் கண்டுபிடித்தனர். இது அவர்களது சாதனை மகுடத்துக்குக் கிடைத்த மற்றொரு முத்தாகும்!

சென்னை நகரில் தொடர் தீ விபத்துக்கள் நடைபெற்றபோது, கண் இமை மூடாது இரவு பகலாய் தொண்டாற்றினர் போலீசுப் படையினர்!

அவர்களும் சமுதாயத்தின் ஒரு அங்கம் என்பதால், ஏழை எளியோரது துயரத் துடிப்பை அறிந்திருப்பவர்களேயாவர்; அதனால் தான், அவர்களும் தீயணைப்புப் படையினரும் அத்தனை பாடுபட்டனர்.

சட்டம்--ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்துக் குறைகளைக் கூறிப் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுவோர் இருக்கக்கூடும்; ஆயினும், எவரும் போலீசுப் படையினரைக் குறை சொல்வதில்லை; படையின் தலைவர்களையே குறை சொல்லுகின்றனர்; இவ்வகையிலும் தீவிரமாகச் செயல்பட்டு முதல் நிலையைப் பெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சனநாயகமானது பல்வேறு பிரச்சினைகளைக் கிளறி விடுகிறது; சட்டம்--ஒழுங்குப் பிரச்சினையும் அவைகளில் ஒன்று; இந்தப் புதிய சூழ்நிலைக்கேற்ப உங்களை நீங்கள் பயிற்றுவித்துக்கொள்ள வேண்டும். 'நீங்கள் எடுத்துரைக்கும் அறிவுரையே சிறந்தது; நீங்கள் கூறுவதேநல்வழி' என்று மக்கள் நம்பும்படிச் செய்ய வேண்டும்; அது ஒரு கலை; அந்தக் கலையில் போலீசுப் படையினர் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்! இது மிகக் கடினமானது--ஆனால் மிக அவசியமானது!

அண்மைக் கால நிகழ்ச்சிகள், 'இந்தக்கலையை நீங்கள் பயின்றுவிட்டீர்கள்' என்ற நம்பிக்கையை அளிப்பதாக உள்ளது.

பெரிய மோதல்களைத் தவிர்த்திருக்கிறீர்கள். இந்த ஆற்றலை -- இந்தப் போக்கை நீடித்துக் கடைப்பிடித்து வரும்படி உங்களை நான் வேண்டுகிறேன்.

கல்லூரி மாணவர்களானாலும், அல்லது வேறு பல துறைகளில் பணியாற்றுவோரானாலும் அவர்களிடையேயும் உங்கள் வீட்டுப் பிள்ளைகள் இருப்பார்கள் அல்லவா?

மக்களும், தங்களில் ஒரு அங்கமாகவே போலீசுப் படையினர் இயங்குகிறார்கள் என்பதை உணர்ந்து அவர்களை உயர்ந்த மதிப்பில் வைத்திருக்க வேண்டும்.

இந்த நிலை இருந்தால்தான் போலீசார் திறம்பட செயலாற்றவும், மக்களின் ஒத்துழைப்பைப் பெறவும் முடியும்."

அணிவகுப்பு மரியாதை--அண்ணா ஏற்றார்

இராசரத்தினம் விளையாட்டு அரங்கில் இந்த விளையாட்டுப் போட்டி விழா நடைபெற்றது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளையாட்டு மைதானத்திற்குள் வந்ததும் அவரைக் குதிரைப் படை போலீசார் வரவேற்றனர்.

பின், விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக் திருமதி இராணி அம்மையார் பரிசுகளை வழங்கினார்.

இலண்டனிலுள்ள இந்திய நூலகம்

சட்டப்படி தீர்வு காண வேண்டுமாம்

புதுடில்லி, டிச. 7—

"இலண்டனிலுள்ள பழைய இந்திய அமைச்சர் அலுவலகத்தில் உள்ள இந்திய நூலகம் பற்றிய தகராறு, நடுநிலையாளர் முடிவுக்கு விடப்பட்டிருக்கிறது"

என்று, இந்தியாவுக்கு வருகை தந்திருக்கும் பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர் ஸ்டுவர்ட், சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

"இந்தப் பிரச்சினைக்கு, சட்டப்படி தீர்வுகாண வேண்டும்; டிரிபியூனல் விசாரிக்க வேண்டிய பிரச்சினைகள் குறித்துப் பிரிட்டன் — இந்தியா — பாகிஸ்தான் அரசுகளுக்கிடை இப்போது பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது"

என்று பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலங்கள்மீது மத்திய அரசு ஆதிக்கம் கூடாது

ஆந்திரமுதல்வரும் குரலெழுப்புகிறார்

மத்திய அரசிலுள்ள சில அமைச்சகங்களை ஒழித்துவிடுமாறு வற்புறுத்தல்

ஐதராபாத், டிச. 7—

"மாநிலங்களின்மீது 'தனி ஆதிக்க'த்தை உருவாக்குவதை மத்திய அரசு நிறுத்த வேண்டும்.

"மத்திய அரசில் உள்ள கல்வி — சமுதாய வளர்ச்சி — விவசாயம் -- கூட்டுறவு — சமூகநலம் -- பொதுச் சுகாதாரம் ஆகிய அமைச்சகங்களை ஒழித்துவிட வேண்டும்.

"ஒவ்வொரு மாநிலத்திலும், விவசாயம் — சமூக நலம் — சமுதாய வளர்ச்சி போன்ற ஒவ்வொரு துறைக்கும் தனிப் பிரிவுகள் உள்ளன; எனவே, இத்துறைகளுக்கு மத்திய அரசில் தனி அமைச்சகங்கள் தேவையே இல்லை"

என்று ஆந்திர சட்டமன்றத்தில், முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி, ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதான விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் திட்டவட்டமாகத் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"புகையிலை, துணி, சர்க்கரை ஆகியவைமீது விற்பனை வரி விதிப்பது பற்றிய அதிகாரங்களை மீண்டும்மாநிலங்களுக்கே மாற்ற வேண்டும்.

"இத்தகைய அதிகார மாற்றத்தினால் மாநில அரசுகளும், மத்திய அரசும் நன்மை பெற இயலும்."

பரிசுச் சீட்டுகளை

விரைவில் அச்சடிக்கும் இயந்திரம்

மேற்கு ஜெர்மனியிலிருந்து வந்துவிட்டன

சென்னை, டிச. 7—

பரிசுச் சீட்டுக்களைத் துரிதமாக அச்சடிப்பதற்காக மேற்கு ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூன்று அச்சு இயந்திரங்கள் தற்போது அரசு அச்சகத்தில் நிறுவப்படுகின்றன; விரைவில் இவை இயக்கப்படலாம்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து மேலும் நான்கு இயந்திரங்கள் விரைவில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எண்களை அச்சிடும் இயந்திரங்களை இறக்குமதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

"இந்தப் புதிய இயந்திரங்கள் அனைத்தும் இயக்கப்படுமானால் பரிசுச் சீட்டுக்களை அச்சடிப்பதில் உள்ள சங்கடங்கள் நீங்கிவிடும்" என்று அதிகார வட்டாரங்கள் கூறின.

'ஏஏ', 'ஏபி' வரிசைகள் வெளியிடப்பட்டுள்ளன; இவை அநேக இடங்களில் விற்பனையாகிவிட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

டிச. 20-ம் நாள் பரிசுச் சீட்டுக் குலுக்கலில் மொத்தம் 14 வரிசைகள் இடம் பெறவிருக்கின்றன.

'தமிழகக் காவல் துறையினர் திறமை மிக்கவர்களாகத் திகழ்கின்றனர்'

'சட்டம்--ஒழுங்கை நிலைநாட்டுவதில் திறம்படப் பணியாற்றியுள்ளனர்'

ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் பெருமிதமிக்க பாராட்டு

சென்னை, டிச. 6—

சீரிய கடமை உணர்ச்சியுடன் பணியாற்றியதைப் பாராட்டி விருது வழங்கப் பெற்ற காவலர்களுக்கு இன்று நடந்த அணிவகுப்பு விழாவில் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் பாராட்டுத் தெரிவித்தார்.

"தமிழகக் காவல்துறையினர் நாட்டிலேயே வெகு திறமைமிக்கவர்களாகத் திகழ்வது, அரசுக்குப் பெருமிதம் அளிப்பதாகும்" என்று குறிப்பிட்டார்.

"சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், சட்ட ஆட்சியை நிலைநாட்டுவதிலும் காவல் துறையினர் திறம்பட அரும் பணியாற்றியுள்ளனர்" என்று புகழ்ந்தார்.

இது சம்பந்தமாக உலகத் தமிழ் மாநாடு, மகாமக விழா, அனைத்து நாட்டு வர்த்தகக் கண்காட்சி, நகரில் ஏற்பட்ட தீ விபத்துக்கள், மத்திய ஊழியரின் அடையாள வேலை நிறுத்தம், தொழில் துறை அமைதி, ஒழுங்கான முறையில் அறுவடை நடக்க உதவியது ஆகிய சந்தர்ப்பங்களில் காவல் துறையினர் ஆற்றியுள்ள தொண்டை கவர்னர் சிறப்பாகக் குறிப்பிட்டார்.

இந்த விருது அணிவகுப்பு, பொதுமக்களுக்கும் -- காவலருக்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்துவதுடன், மற்றுள்ள காவலரையும் அவர்தம் உழைப்பால் உயர்ந்து விருதுபெற ஊக்குவிக்குமெனக் கவர்னர் நம்பிக்கை தெரிவித்தார்.

முதலமைச்சர் அண்ணா, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், செ. மாதவன், ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து ஆகியோரும் இந்த அணிவகுப்பு விழாவுக்கு வந்திருந்தனர்.

போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆர். எம். மகாதேவன், விருது பெறுவோர்களின் பெயர்களைப் படித்தார்; 22-பேர் விருதுகள் பெற்றனர்.

கவர்னர், அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு விருதுகளை வழங்கினார்.

குழப்ப நிலைக்குக் காரணம் காங்கிரசுதான்!

சென்னை, டிச. 7—

"நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் நிலையற்ற தன்மை, சமூகக் குழப்பம், பெரும் பேராசை, குழப்ப நிலை ஆகியவற்றுக்குக் காங்கிரசுதான் காரணமாகும்.

"உருக்கு உற்பத்தி, நவீன இயந்திரச் சாதன உற்பத்தி, அணு மின்சாரம் ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ள ஒரு நாட்டில், இத்தகைய நிலைமைகள் காணப்படுவது, விசித்திரமானதாகும்.

"சனநாயக நெறியிலிருந்து தவறிச் செல்வதும், சமநிலையற்ற அளவில் தவறுகப் பொருளாதாரத் திட்டத்தை வகுத்திருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

"முந்தைய மூன்று திட்டங்களின் விளைவாக 9 கோடி பேர் வேலையின்றி இருக்கின்றனர்; இவர்களில் பெரும்பாலோர் படித்தவர்கள்!

"அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை; இதன் விளைவாக ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன!

"ரூ. 7 கோடி அந்நியச் செலாவணி ஈட்ட வேண்டியதற்காக ரூ. 20 கோடி மானிய உதவி அளிக்கப்படுகிறது!"

---உமாயூன் கபீர்

(முன்னாள் மத்திய அமைச்சர்; தென்னிந்திய வர்த்தகக்கழகத்தில்.)

கொடுமைகளை அனுபவித்தோம்!

இழைக்கப்பட்ட அநீதிகளைப் பொறுமையுடன் ஏற்றோம்!

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் 'அரிசிப் புரட்சி'க்கு ஆவன செய்தோம்

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கருத்துரை

கோவை, டிச. 8—

கோவை பி. வி. வி. திடலில் நடந்த 'தமிழ்நாடு' பெயர் சூட்டும் மகிழ்ச்சி விழாப் பொதுக்கூட்டத்தில் உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:—

"இன்று நமக்கு கிட்டியுள்ள இந்தத் 'தமிழ்நாடு' பெயர் சாதாரணமாகக் கிடைத்தது என யாரும் தப்புக் கணக்குப் போட்டுவிட வேண்டாம்.

தமிழகத்தில் 20 ஆண்டுகளாக மக்களை வாட்டி வதைத்த எதேச்சாதிகாரத்தைத் தலைகுப்புறக் கவிழ்த்த பிறகுதான் நமக்குக் கிடைத்தது இந்த வெற்றி.

இரத்த வெறி பிடித்தவர்கள், தமிழகத்தை இரத்தத் தடாகமாக்கி விட்டுச் சென்ற பிறகுதான் கிடைத்தது இந்த வெற்றி!

இந்த எதேச்சாதிகாரத்தை விரட்டக் கழகக் கண்மணிகள், பசி நோக்காது -- கண் துஞ்சாது -- அயராது பாடுபட்டனர்!

பேரறிஞர் அண்ணா தலைமையில் போராடி கடும் சிறைத் தண்டனையையும் அனுபவித்த பிறகு கிட்டிய வெற்றிதான் இது!

இரண்டாண்டுக் காலத்தில் தி மு. கழக ஆட்சி மகத்தான சாதனையை மக்களுக்கு செய்து காட்டியுள்ளது. இதை பட்டியல் போட்டுக் காட்டவும் தயாராக இருக்கிறோம்.

தி. மு. கழக ஆட்சி போனால் சனநாயகம் குட்டிச்சுவராகி விடும்--மக்களுக்குத் தொண்டு செய்யும் நல்லதொரு ஆட்சி இனி கிடைக்காது -- என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூற விரும்புகிறேன்; இதை எச்சரிக்கையாகவும் சொல்கிறேன்.

பஞ்சாலை நெருக்கடிக்கு யார் காரணம்?

இன்று தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளில் பஞ்சாலைப் பிரச்சினை ஒன்று. இப்பிரச்சினையைத் தீர்க்க தமிழக அரசு தொடர்ந்து மத்திய அரசுடன் போராடி வருகிறது. இப்பிரச்சினையை நாங்கள் ஒருபோதும் தட்டிக் கழிக்க மாட்டோம்.

ஆனால் இப்பஞ்சாலை பிரச்சினைக்கு மூலகாரணம் மத்திய அரசுதான்; என்றாலும், தொழிலாளர் துயர்துடைப்பதில் தமிழக அரசுக்கும் முக்கிய பங்கு உண்டு என்ற நல்லெண்ணத்தில் தொடர்ந்து போராடி வருகிறோம்.

தமிழகத்தில் பிறரைக் காட்டிலும் விவசாயிகள்மீது தி. மு கழகத்திற்குத்தான் அதிக அக்கறை உண்டு.

உலகிலேயே பெரும் 'அரிசிப் புரட்சி'யை ஏற்படுத்தியது கழக அரசுதான் என்பது, மிகைபடக் கூறுவதாகாது!"

ஆதித்திராவிட மாணவிகள்விடுதி

கோவையில் திறப்பு

கே. ஏ. மதியழகன் சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

கோவை, டிச. 8—

ரூ. 1.75 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட ஆதித்திராவிட' மாணவிகள் விடுதி ஒன்றைத் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் இங்கு திறந்துவைத்தார்.

முதலமைச்சர் அண்ணாவின் சிற்றன்னை திருமதி இராசாமணி அம்மையார் பெயரால் இவ்விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

கே. ஏ. மதியழகன்

விழாவுக்கு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இதுபோன்ற விடுதிகளால் பட்டிக்காட்டில் கல்வியறிவு இல்லாது தவிக்கும் ஒரு நிலையைத் தவிர்க்கலாம்.

காடு கழனிகளில் வசிக்கும் பெண்கள் அச்சமின்றி வசதியாகத் தங்கிப் படிக்கவும் இவ்விடுதி பயனுள்ளதாக இருக்கும்.

கிராமப் பெண்கள் நகரத்திற்கு வந்து படித்துப் போகும் வாய்ப்பையும் பெறுகின்றனர்."

சத்தியவாணிமுத்து

கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து கூறியதாவது:—

"சமுதாயத்தில் ஆதித்திராவிடப் பெண்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டும்வகையில், இதுபோன்ற மகளிர் விடுதிகள் தமிழகத்தில் பரவலாக ஏற்படுத்தப்பட்டுவருகின்றன.

மாணவிகள் இங்கு வசதியாக தங்கிப் படித்தால் மட்டும் போதாது; தங்கள் வாழ்க்கைக்கு இப்பேர்ப்பட்ட ஒரு திட்டத்தையும் போட வேண்டும்; நன்றாகப் படித்து ஊதியம் திரட்டி அழகிய கட்டிடங்களைச் சொந்தமாகக் கட்டி வசதியாக வாழ வேண்டும்.

இன்று சமுதாயத்தில் பெண் கல்விதான் துரித முன்னேற்றம் அடைந்து வருகிறது.

இன்று மாணவர்களைவிட மாணவிகள்தான் நல்ல முறையில் படிக்கின்றனர்; மாணவர்கள் தங்கள் படிப்புக் காலத்திலே அரசியலில் ஈடுபட்டுக் கல்வியைப் பாழாக்கிக் கொள்கின்றனர்; எனவே, பெண்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தி முன்னேற வேண்டும்."

மாவட்ட நல அதிகாரி திரு சுந்தர்ராசன் வரவேற்று நன்றி கூறினார்.

'மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல் திறனில் பெரும் தவறுகள்'

'கடந்த கால படிப்பினையைக் கருத்தில்கொண்டு அடுத்துவரும் திட்டங்கள் உருவாக்கப்படும்'

உணர்ந்தபின் கூறுகிறார் திட்டக் குழுத் துணைத் தலைவர்

புதுடில்லி, டிச. 7—

"முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில், முதலீடு முறை அல்லது முதலீடு அளவு அல்லது செயல் திறன் ஆகியவைகளில் தவறுகள் மலிந்திருந்தன; ஆகவே, கடந்த கால படிப்பினைகளைக் கருத்தில் கொண்டு, அடுத்துவரும் திட்டங்கள் உருவாக்கப்படும்"

என்று திட்டக் குழுத் துணைத் தலைவர் டாக்டர் காட்கில், அனைத்து நாட்டு நிலவியல் கூட்டத்தில், இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விளக்குகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"பொருளாதார வளர்ச்சியில் நிலையான தன்மை ஏற்படுவதையும், வட்டார ஏற்றத்தாழ்வு நீங்குமாறும் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கபட்டிருக்கிறது."

புதிய ரேஷன் கார்டுக் கணக்கெடுப்பு

பொதுமக்களுக்கு அமைச்சர் மதியழகன் வேண்டுகோள்

சென்னை, டிச. 3—

புதிய ரேஷன் கார்டுகள் தயாரிப்பதற்கான கணக்கெடுப்பு டிச. 7-ம் நாள் முதல் ஆரம்பமாகிவிட்டது; 15 நாட்களில் முடிவடையலாம்; 960 ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுபற்றிக் குறிப்பிட்டு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கூறியிருப்பதாவது:—

"எட்டு இலட்சம் குடும்பங்களைக் கணக்கெடுப்பது பெரும் பணியாகும்; இந்தப் பணியை மேற்கொள்ளுமாறு அரசு ஊழியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால்தான் இதை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

"கணக்கெடுப்பவர்கட்கு அடையாளக்கார்டுதரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயர்களும், அவர்கள் கணக்கெடுக்கும் வட்டமும் அதில் குறிப்பிட்டிருக்கும்; வீட்டுக்காரர் யாராவது கேட்டால், அடையாளக் கார்டைக் காட்டுமாறு அவர்களிடம் கூறப்பட்டிருக்கிறது.

"கணக்கெடுப்பவர்கள், நாள்தோறும் காலை 7 மணியிலிருந்து 10 மணிக்குள்ளும், மாலை 6 மணியிலிருந்து இரவு 8 மணிக்குள்ளும் வருவார்கள்; அவர்களுடன் எல்லாவிதத்திலும் ஒத்துழைக்கும்படியும், சரியான தகவல்களைக் கொடுக்குமாறும் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

பலமடங்கு மேலானது!

மனிதனின் திறமையினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் எல்லாமாகச் சேர்ந்து நமக்குத் தரும் ஆற்றலைவிட, அகிம்சையிலிருந்து கிடைக்கும் ஆற்றல் பல மடங்கு மேலானது!

—காந்தியார்

நீலகிரி மாவட்டத்தில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா

பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டார்

நீலகிரி மாவட்டத்தில், 'தமிழ் நாடு' பெயர் சூட்டிய மகிழ்ச்சி விழாவில் நலத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா கலந்து கொண்டார்.

30—11—68 அன்று காலை குன்னூருக்கு வருகை தந்த அமைச்சர் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. பி. முருகேசன் எம்.சி, வட்டச் செயலாளர் எம். ஏ. சரீப், நகரச் செயலாளர் எச். தங்கம், மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

அடுத்து குன்னூர் நகராட்சியின் சார்பில் நலத் துறை அமைச்சருக்கு வரவேற்பு தரப்பட்டது; நகராட்சித் தலைவர் க. ராமராஜ் வரவேற்பு இதழை வாசித்தளித்தார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் பேசினார்.

பின், அமைச்சர் அங்கிருந்து உதகை நகரம் சென்றார்; மாவட்ட தி. மு. க. செயலாளர், வட்டச் செயலாளர் திரு. இராசு, நகரச் செயலாளர் செயராமன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

உதகை நகரப் பொதுமக்கள் மூன்று பர்லாங் தூரம் வரையில் அமைச்சரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்; கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவித்தனர்.

உதகையில் நடைபெற்ற நகர தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டார்.

பின், கொலக்கோம்பை தி.மு.க பொதுக்கூட்டத்தில் அமைச்சர் கலந்துகொண்டு பேசினார்.

மற்றும் கோத்தகிரி, கூடலூர் ஆகிய பகுதிகளில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டங்களிலும் அமைச்சர் கலந்துகொண்டார்,

எல்லா நிகழ்ச்சிகளிலும் நீலகிரி மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. பி. முருகேசன் எம்.சி., சட்ட மன்ற உறுப்பினர்கள் மாணிக்க வாசகம், துரைசாமி ஆகியோரும் மற்றும் கோவை சானகிராமன், வழக்கறிஞர் தேவராசனும் கலந்து கொண்டனர்.

கூட்டத் துவக்கத்தில் காந்திபுரம் எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தின் சார்பில் அமைச்சருக்கு போர்வை ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் சோ. கருணாநாதன், மாணிக்கவாசகம், துரைசாமி, கே. பி. முருகேசன், வழக்கறிஞர் தேவராசன், கோவை சானகிராமன் ஆகியோரும் கழக அரசின் சாதனைகளைப் பற்றிப் பேசினர்.

கூட்டத்திற்கு சி. ப. சிவசண்முகம் தலைமைதாங்கினார்.

அந்தியூர் ஊராட்சி சீரணியின் திட்டம்

சிறப்புக்கூட்டத்தில் முடிவு

அந்தியூர் ஊராட்சி ஒன்றிய சீரணியின் சிறப்புக் கூட்டம், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் கே. கே. சுப்பிரமணியம்—ஆணையர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு 33 உறுப்பினர்கள் வருகை தந்தனர்.

ஒன்றியச் சீரணிக்கு ஏ. ஏ. வெற்றிவேல் தலைவராகவும், இரா. சுப்பிரமணியம் துணைத் தலைவராகவும், தவசியப்பன் செயலாளராகவும், இராமசாமி துணைச்செயலாளராகவும், இராசகோபால் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக இ. பி. தேவண்ணன், டி. பி. சாம்ராஜ், ஏ. எல். சுப்பிரமணியம், பொக்கியம்மாள், பி. முனியப்பன், கே. எல். காளியப்பன், அ. மு. இராமசாமி, பூமாலை, ஏ.வி. கோவிந்தன், பி. சீனிவாசன், பி. பெருமாள், ஏ. ஏ. சின்னசாமி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் (1968—69) அந்தியூர் கரட்டுப் பாளையம் பாதை--அந்தியூர் பெரும் பள்ளியில் ஒரு கக்கூசு, சிறுநீர் கழிக்குமிடம் கட்டுதல்--தவுட்டுப் பாளையத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டுதல் ஆகிய பணிகளைச் செய்து முடிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

உடனடியாக அந்தியூர்-கரட்டுப் பாளையம் பாதை வேலையைச் செய்து முடிப்பதெனத் திட்டமிடப்பட்டு அதற்கான முயற்சியில் கல்வி விரிவு அலுவலர் உதவியுடன் சீரணி செயல்படத் தொடங்கியிருக்கிறது.

ஏழைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம்

அமைச்சர் உறுதி

30—11—68 அன்று குன்னூர் வட்டச் தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:--

"அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழக அரசு ஏழைகளின்பால் அதிக அக்கறையும், அவர்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்தில் ஆர்வமும் கொண்டிருக்கிறது.

பெரியநாயக்கன்பாளயத்தை அடுத்துள்ள நரசிம்மநாயக்கன் பாளையத்திலுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கு 142 இலவச நிலப் பட்டாக்களை வழங்கினேன்.

குன்னூர் காந்திபுரத்தில் உள்ள எம். ஜி. ஆர். நற்பணி மன்றத்தார் சார்பில் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச நிலப் பட்டாக்கள் கோரி விண்ணப்பம் தரப்பட்டுள்ளது. அது பற்றி விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவு செய்யப்படும்.

ஏழை எளியோரின் கோரிக்கைகளை விரைவாகத் தீர்க்க தமிழக அரசு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது."

தேவையற்ற முறையில் மாற்றம் செய்வதேன்?

சென்னை, டிச. 7—

"அனைத்திந்திய வானொலிச் செய்தி அறிவிப்புக்களில் காலை 8 மணிக்கு ஆங்கிலச் செய்திக்குப் பதிலாக இந்திச் செய்தியை ஒலிபரப்புவது தேவையற்றது; வழக்கப்படி, 8 மணிக்கே ஆங்கிலச் செய்தியை ஒலிபரப்பலாம்.

"இந்திக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தேவையற்ற முறையில் இந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது! இதைக் கண்டித்து மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சரிடம் நாங்கள் முறையிடுவோம்.

"இதுவரையில் இருந்து வந்த ஒலிபரப்பை நீக்கிவிட்டுப் புதிதாக இந்திச் செய்தி ஒலிபரப்பைப் புகுத்துவது, தேவையில்லாத தொந்தரவுகளை வரவழைப்பதாகும்; ஆகவே, முன்பு இருந்த முறையையே தொடர்ந்து கடைப்பிடிப்பது தான் நல்லது."

--இரா. நெடுஞ்செழியன்

சென்னை மாநகராட்சிக்கு மேலும் ஆறு உறுப்பினர்கள்

கூட்டு உறுப்பினர்களாகத் தேர்வு பெற்றனர்

புதிய குழுக்களுக்கும் உறுப்பினர்கள் தேர்வு

சென்னை, டிச. 9—

சென்னை மாநகராட்சியில் ஆதித் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படாத ஆறு வட்டங்களுக்கான நியமன உறுப்பினர் தேர்தலில் கீழ்க்காணும் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ; இவர்கள் அறுவரும் கீழ்க்காணும் வட்டங்களின் பிரதிநிதிகளாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர் :—

திருவல்லிக்கேணி :— பி. ஆர். சண்முகம்,

சீதக்காதிநகர் (துறைமுகம்) :— சி. கோவிந்தராசன்.

புரசைவாக்கம் :— கண்ணாயிரம்.

பூங்காநகர் :—ஏழுமலை.

சைதாப்பேட்டை :—ஆர்.கிருஷ்ணன்.

ஆயிரம்விளக்கு :— என். சுப்பிரமணியம்.

இவர்கள் அறுவரும் கழக உறுப்பினர்கள் ஆவார்கள்.

இந்த அறுவரும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களாக இணைக்கப்பட்ட பிறகு கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 ஆக உயருகிறது.

இந்த அறுவரும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லைசென்சு அப்பீல் குழு

மற்றும் லைசென்சு அப்பீல் குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் கீழ்க்காணுவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

ஆர். சிலார் மியான், எம். கோவிந்தராசன், பொ. கு. இராமதாசு, எம். எஸ். இராமச்சந்திரன், ஏ. சுப்பிரமணியம்.

கணக்குக் குழு

கணக்குக் குழு உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

கே. எம். கண்ணபிரான், ரங்கபாஷ்யம், பசுபதி தனராஜ், கிருஷ்ணன், புருசோத்தம குப்தா.

வரி விதிப்பு முறையீட்டுக் குழு

வரி விதிப்பு முறையீட்டுக் குழுவிற்கு என். வி. என். சோமசுந்தரம், சி. வி. சிட்டிபாபு ஆகியோரும் தொலைபேசி ஆலோசனைக் குழுவிற்கு பட்சி இராசகோபாலனும், தியாகராயர் கல்வி நிறுவனங்களின் நிர்வாகக் குழுவிற்கு மாநகராட்சியின் பிரதிநிதியாக இராசரத்தின நாயக்கரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னையில் சுரங்க இரயில் பாதை

அமைவது நான்காவது திட்டத்தைப் பொறுத்ததாம்

சென்னை, டிச. 7—

இந்தியாவில் நான்கு பெரிய நகரங்களில் சுரங்க இரயில் பாதைகள் அமைக்கத் திட்டக் குழு நான்காவது திட்டத்தில் நிதி ஒதுக்கும் என்று தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து சென்னையில் அம்மாதிரி இரயில் பாதை அமைப்பது பற்றி அக்கறை காட்டத் துவங்கியுள்ளனர்.

சென்னையில் ஒரு வட்ட வளைவு இரயில் பாதை அமைக்கத் தற்காலிகமான திட்டமொன்றை சென்னை நகரத் திட்ட இயக்குநர் துறை ஏற்கனவே தயாரித்துள்ளது. இத்திட்டத்தின்படி நகரில் மின்சார இரயில்பாதை செல்லாத பகுதிகளில் தெற்கில் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், அடையாறு ; வடக்கில் பூவிருந்தவல்லி, ஆவடி ஆகிய இடங்கள் வழியே மின்சார இரயில் பாதைகள் அமைக்கப்பட்டு அவை கோட்டை இரயில் நிலையத்துடன் இணைக்கப்படும்.

இந்தத் திட்டம் இரயில்வே போர்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் கட்டுப்படியாகுமா -- இதை அமைப்பது இயலுமா என்பதைப் பரிசீலித்த பின்னர் அமைப்புப் படம் தயாரிக்கப்படும்.

இப்பிரச்சினை முழுதும் இரயில்வே போர்டின் முடிவைப் பொறுத்திருக்கிறது. பெரிய நகரங்களில் சுரங்க இரயில்வே அமைப்பது என்பதை கொள்கையளவில் திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளபோதிலும், திட்டம் செயலுக்கு வருவது நான்காவது திட்டத்தின் இறுதி வடிவத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது.

அரிசன நலத் துறையின் பெயர் மாறுகிறது

தமிழக அரசின் புதிய ஏற்பாடு

சென்னை, டிச. 9—

'சமூக நலத் துறை' எனும் புதிய துறையைத் தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது

இத்துறைக்குச் செயலாளராக பத்திரப் பதிவுத்துறைத் தலைமைக் கண்காணிப்பாளராக இருந்து வரும் திரு. எம். ஏ. ஷரீப் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை, 'அரிசன நலத்துறை அமைச்சர்' என அழைக்கப்பட்ட திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், இம்மாற்றத்தால், 'சமூக நலத் துறை அமைச்சர்' எனப்படுவார்.

மாதர் நலம், பிற்பட்ட வகுப்பினர், மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலம், தகவல் மற்றும் செய்தி, சினிமாச் சட்ட நிர்வாகம் ஆகிய பிரிவுகள் இனி இப்புதிய துறையில் இருக்கும்.

புதிய துறையைச் சேர்த்து இனிமேல் தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பதினைந்து துறைகள் இயங்கும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

10--12--68

புள்ளமங்கலம்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு ; பேசுவோர் : சி. தமிழரசி, சு. நாராயணசாமி, இரா. கணேசன், இரா. தென்னவன், மற்றும் பலர்.

இடைப்பாடி

தா. காட்டுவளவு தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு உந்து வண்டித் திடலில் ; தலைவர் : பழனிச்சாமி; பேசுவோர்: கேரள சுந்தரம், செ. கந்தப்பன் எம்.பி., அ. ஆறுமுகம் எம்.எல்.ஏ., பா. பண்டரிநாதன், ரகிமான், பழ. பெரியசாமி.

11--12--68

ஆலங்கோட்டை

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு ; பேசுவோர் : சி. தமிழரசி, சு. நாராயணசாமி, மற்றும் பலர்.

மனித உரிமை நாள்

மனித உரிமை நாள் -- இருபதாம் ஆண்டு விழா, 10—12—68 மாலை 4-15 மணிக்கு மவுண்ட் ரோடு சிறுவர் அரங்கில் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும்; டாக்டர் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் பரிசுகள் வழங்குவார்.

தஞ்சையில் அண்ணா சிகிச்சை நிதியளிப்புக் கூட்டம்

அமைச்சர் மு. கருணாநிதி கலந்துகொள்கிறார்

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதியளிக்கும் பொருட்டு, 11—12—68 மாலை தஞ்சை நகர தி.மு.க. சார்பில், திலகர் திடலில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும் ; கழகப் பொருளாளரும் பொதுப்பணி அமைச்சருமான திரு. மு. கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு நிதியைப் பெறுவார்.

ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற நிதியை, திரு. கருணாநிதி அவர்களிடம் நேரில் கொடுக்குமாறு நகரச் செயலாளர் எஸ். நடராசன் கேட்டுக்கொள்கிறார்.

கல்வி-தொழிலமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிச. 11 காலை 10 மணி : பழனி அன்பு நிலையம், நாதசுரக் கல்லூரி, சித்த மருத்துவ நிலையம் பார்வையிடல்; 11-45 : இழுவை வண்டி நிலைய அடிக்கல் நாட்டு விழா ; மாலை 4 : பண்பாட்டுக் கல்லூரியில் கவிஞர் பாரதிதாசன் திருவுருவப்படத் திறப்பு ; 5 : கலைக் கல்லூரி மாணவர் உணவு விடுதிக்கு அடிக்கல் நாட்டலும், அறிஞர் அண்ணா மாணவர் விடுதித் திறப்பு விழாவும் ; இரவு 7 : மானூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா ; 8 : மானூர் பொதுக்கூட்டம்.

டிச. 12 காலை 10 மணி : சோழவந்தான் பெண்கள் உயர்நிலைப் பள்ளி விஞ்ஞான ஆய்வுக்கூடத் திறப்பு ; 10-30 : ஆண்கள் உயர்நிலைப்பள்ளி நிகழ்ச்சி ; 11 : முள்ளிப்பள்ளம் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் முதலமைச்சர் படத் திறப்பு : 11-30 : காமராசர் துவக்கப்பள்ளி நிகழ்ச்சி : பிற்பகல் 3 : சோழவந்தான் பள்ளிச் சீரமைப்பு மாநாடு; மாலை 5 : அலங்காநல்லூர் நிகழ்ச்சிகள்; இரவு 7: அலங்காநல்லூர் பொதுக்கூட்டம்.

டிச. 13 காலை 9 மணி : விருதுநகர் வெள்ளைச்சாமி நாடார் தொழில் நுணுக்கப்பள்ளிப் புதிய கட்டிடத் திறப்பு : 10-30 : சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைத் துவக்கம் ; 11-30 : சிவகாசி கூட்டுறவு தொழிற்பேட்டைத் துவக்கம் ; 12-30 : சிவகாசி பெண்கள் உயர்நிலைப்பள்ளிப் புதிய கட்டிடத் திறப்பு ; மாலை 4 முதல் இரவு 10 வரை: தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினர் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகள்.

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

	ரூ. காசு
நேற்றைய இதழ்த் தொடர்ச்சி	17,264.54
அமைச்சர் மா. முத்துசாமி	501.00
முரசொலி மாறன் எம்.பி.	501.00
இரா. செழியன் எம்.பி.	500.00
திருவண்ணாமலை ப.உ. சண்முகம் எம்.எல்.சி.	250.00
மதுரை எஸ். முத்து எம்.எல்.சி.	250.00
கோவை - சர்க்கார் சாமக்குளம் வை.கி. துரையன்	250.00
சென்னை 114-வது வட்டம் நகராட்சி உறுப்பினர் சா. கணேசன்	101.00
சென்னை-1 பிரிகேடியர் எஸ். கேசவலு ஓ.எம்.சி.	101.00
சித்தையன்கோட்டை வி.எஸ்.எஸ். மணி எம்.எல்.ஏ.	100 00
வாணியம்பாடி எஸ்.ஏ. வேணுகோபாலன்	51.00
திருப்பூர் பிரைட்டன் நிட்டர்ஸ் கே. சுப்பிரமணியம்	51 00
சென்னை-14 என்.எஸ். ராகவாச்சாரி	11 00
சென்னை 30-வது வட்டம் திருவள்ளுவர் முன்னேற்ற மன்றம்	11.00
சென்னை-1 குமரன் சலவை நிலையம்	11.00
திருவில்லிபுத்தூர் எஸ்.ஆர். பாலகிருஷ்ணன்	11.00
அரக்கோணம் கோ. வரதராசன்	5.01
செங்கோட்டை சீனிவாச கரையாளர்	1001.00
கழகப் பொருளாளர் கலந்துகொண்ட பம்பாய் நிகழ்ச்சிகளில் அளிக்கப்பட்டவை :—	
பம்பாய் இராஜராஜேசுவரி பரத நாட்டிய கலா நிலையம் கு. கல்யாணசுந்தரம்	101.00
பம்பாய்–மாதுங்கா தி. மு. க. கிளை சார்பாக (முதல் தவணையாக)	125.00
பம்பாய்–மான்கூர்டு தி. மு. க. கிளைத் தோழர்கள்	110.00
பம்பாய் இந்துஸ்தான் லிவர் கம்பெனித் தொழிலாளர்கள்	13.13
பம்பாய் கழகத் தோழர் ரங்காநாதன்	11.00
ஆக மொத்தம்	21,330.68

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :—

மு. கருணாநிதி, பொருளாளர்,
தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

க. அன்பழகனுக்கு வரவேற்பு

என்.வி.என்.--க. இராசாராம்--மேயர் பங்கேற்பு

சென்னை, டிச. 9—

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு முதலிய வெளிநாடுகளில் இரண்டு திங்கள் சுற்றுப்பயணம் செய்து அண்மையில் தாயகம் திரும்பிய நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கட்கு, சென்ற 6—12—68 அன்று மாலை, சென்னை —மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் விடுதியில் ஒரு வரவேற்பு -- தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

நண்பர்கள் குழு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தத் தேநீர் விருந்துக்குப்பின் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்திற்கு, நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் க. இராசாராம் தலைமை வகித்தார்.

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., மேயர் வேலூர் நாராயணன், ந. வீராசாமி எம்.எல்.ஏ., காஞ்சி மணிமொழியார், தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர் கோ. பன்னீர்செல்வம் ஆகியோர் பேராசிரியர் அனபழகன் அவர்களை வரவேற்றும், பாராட்டியும் உரையாற்றினர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேராசிரியர் பேசுகையில், தமது சுற்றுப்பயணத்தின் மூலம் தாம் கண்டவற்றையும் அறிந்தவற்றையும், சுவைபடவும், விரிவாகவும் எடுத்து விளக்கினார்.

பேராசிரியர் அவர்கட்கு ஏராளமான மலர் மாலைகள் நண்பர்களால் அணிவிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி. ஏ. சாமிநாதன், மாயவன் ஆகியோரும், மற்றும், மாநகராட்சி உறுப்பினர்களும விருநதில் கலந்து கொண்டனர்.

துவக்கத்தில், நண்பர்கள் குழுச் சார்பில் தோழர் மா. செங்குட்டுவன் அனைவரையும் வரவேற்றார்.

தோழர் பொன். நடராசன் இறுதியில் நன்றி கூறினார்.

உணவு உற்பத்தியில் உற்சாகம் தரும் நிலைமை

அறுவடைக்குப் பின் விலைகள் குறைந்துவருகின்றன

மத்திய துணை அமைச்சர் தரும் தகவல்

கொச்சி, டிச. 9—

"அறுவடைக்குப் பின், நாட்டின் சில பகுதிகளில் உணவுத் தானியங்களின் விலை குறைந்துவருகிறது."

"நாடு முழுவதையும் மொத்தமாகக் கவனித்துப் பார்க்கையில், பயிர் நிலவரம் மிகவும் உற்சாகமளிப்பதாக இருக்கிறது."

"சாகுபடி முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நவீன உத்திகள் வெற்றிகரமாகச் செயல்படுகின்றன ; எல்லா இடங்களிலும் 'ஐ.ஆர்.-8' ரக நெற்பயிர் நன்கு வளருகிறது."

"வெளிநாடுகளிலிருந்து அரிசி வாங்க மத்திய அரசு முயன்று வருகிறது ; ஆனால், அந்நியச் செலாவணி வசதிக் குறைவுதான் இதிலுள்ள சிரமமாகும்"

என்று, மத்திய உணவுத்துறைத் துணையமைச்சர் அன்னா சாகேப் ஷிண்டே, பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.